பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4

17 08 2025 SUNDAY 12.40 PM

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை புதுதில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கி வைக்கிறார்.
2. ஜம்மு காஷ்மீரில் பெருமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய உள்துறை திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
3. நாட்டில் உள்ள இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் சுயசார்பு இந்தியாவுக்கு அடித்தளமாக திகழ்வதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.
4. தமிழக வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு சுமார் 10 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக தகவல் ஒலிபரப்புதுறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
5. யுக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை புதுதில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கி வைக்கிறார்.

துவாரகா விரைவுச்சாலையின் தில்லி பிரிவு மற்றும் நகர்ப்புற விரிவாக்க சாலைத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகளை அவர் தொடங்கிவைக்க உள்ளார்.

இதையொட்டி கட்டுமானப்பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடனும் பிரதமர் கலந்துரையாடினார்.

முன்னதாக இந்த திட்டப்பணிகளின் செயலாக்கம் குறித்து பிரதமர் காணொலி வாயிலாக ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>

நாட்டில் உள்ள இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் சுயசார்பு இந்தியாவுக்கு அடித்தளமாக திகழ்வதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

தில்லி ஐ ஐ டி மாணவர்களுடன் இன்று காலை உணவருந்தி கலந்துரையாடிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆதரவு காரணமாக நாட்டில் உள்ள திறன்மிக்க இளைஞர்கள்,

*புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு வருவதோடு தொழில் முனைவோராகவும் உருவெடுத்திருப்பதாக கூறியுள்ளார்.*

*அடுத்த 25 ஆண்டுகள் நாட்டின் பொற்காலமாக அமையும் என்றும், இதற்கான பணிகளை இளைஞர்கள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுப்பது உறுதி என்றும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.*

*<<<<<>>>>>*

*தமிழக வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு சுமார் 10 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக ரயில்வேத் திட்டங்களுக்கு மட்டும் நடப்பாண்டில் 6 ஆயிரத்து 626 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.*

*அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் தமிழக ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுவதுடன், 33 ஆயிரத்து 476 கோடி ரூபாய் செலவில் இரட்டைப்பாதை உள்ளிட்ட புதிய ரயில்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.*

*(Voice Byte – எல். முருகன் (1)– 48 Sec.)*

*பிஜேபி ஆட்சியில்தான் தமிழ் மொழிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதுடன், மத்திய அரசுப்பணிகளுக்கான தேர்வுகள் தமிழில் நடத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*(Voice Byte – எல். முருகன் (2)– 32 Sec.)*

*தூய்மைப்பணியாளர்களுக்கு பணிநிரந்தம் மற்றும் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.*

*(Voice Byte – எல். முருகன் (3)– 12 Sec.)*

*அமலாக்கத்துறை சோதனை குறித்த கேள்விக்கு, அந்த துறை ஒரு சுதந்திரமான அமைப்பு என்றும், அவர்களுக்கு கிடைக்கும் தகவல்கள் அடிப்படையில் சோதனை மேற்கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் பதிலளித்தார்.*

*<<<<<>>>>>*

நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு 25 கோடிக்கும் அதிகமான மண்வள சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த அட்டை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, ரசாயன உரங்கள் பயன்பாடு குறித்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, மண்ணில் உள்ள ஊட்டச்சத்துகளை மேம்படுத்துவது குறித்த ஆலோசனையும் வழங்கப்படுகிறது.

இதன்மூலம் விவசாயிகள் மண்ணின் தன்மைக்கேற்ப பயிர் சாகுபடி மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஆயிரத்து 706 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாகவும் அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில் மேகவெடிப்பால் ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி நான்கு பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இதுகுறித்து, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா ஆகியோரை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கத்துவா மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இப்பகுதிக்கு தேசிய பேரிடர் மீட்புப்படையினரும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீட்புப்பணிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங்கும், மாவட்ட நிர்வாகத்தை தொடர்புகொண்டு மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வெள்ளப்பெருக்கு காரணமாக ரயில்வே தண்டவாளங்கள், தேசிய நெடுஞ்சாலைகளும் சேதமடைந்திருப்பதாக கூறியுள்ளார்.

இவற்றை சீரமைக்கும் பணியில் உள்ளூர் அதிகாரிகளுடன், ராணுவம் மற்றும் துணை ராணுவப்படையினரும் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மழையால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தமது இரங்கலையும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஜம்மு காஷ்மீரில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, மேகவெடிப்பு, திடீர் வெள்ளப்பெருக்கு, மற்றும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழக அரசின் புதிய திட்டங்கள் மூலம் ஏராளமானோர் பயனடைந்து வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டையில், மாநிலத்திலேயே முதல் முறையாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் வாயிலாக இணையவழி பயிர்க்கடன் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

திமுக ஆட்சிக்காலத்தில்தான் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டதாக கூறிய முதலமைச்சர், இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள புதிய பணிகள் குறித்த ஐந்து அறிவிப்புகளையும் வெளியிட்டார்.

*(Sound Byte – ஸ்டாலின் – Sec. )*

<<<<<>>>>>

வாக்காளர் பட்டியல் தயாரிப்புப்பணியில் பல கட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், குறைபாடு இல்லாத வாக்காளர் பட்டியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் தயாரிப்பின் ஒவ்வொரு நிலையிலும் அரசியல் கட்சிகள் பங்கேற்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், பிழைகள் ஏதும் இருப்பின் அதனை சரிசெய்ய உரிய வாய்ப்பும், அவகாசமும் வழங்கப்படுவதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் வாக்காளர்களின் கருத்துக்கள் தொடர்ந்து வரவேற்கப்படுவதாகவும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி, நேபாளத்தில் இரண்டு நாள் பயணமாக காத்மாண்டு சென்றுள்ளார்.

நேபாள வெளியுறவுத்துறை செயலாளர் திரு அம்ரித் பகதூர் ராய் அழைப்பின்பேரில் அவர் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இன்று, திரு விக்ரம் மிஸ்ரி, அதிபர் திரு ராம்சந்திர பவ்டேல், பிரதமர் திரு கே பி ஷர்மா ஒலி, நேபாள காங்கிரஸ் தலைவர் திரு Sher Bahadur Deuba, முன்னாள் பிரதமரும், நேபாள கம்யூனிஸ்ட் தலைவருமான திரு புஷ்பகமல் தாஹல் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேசவுள்ளார்.

இதுதவிர, நேபாள வெளியுறவுத்துறை செயலாளருடன், இருநாட்டு குழுக்கள் அளவிலும் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

நேபாள பிரதமர் திரு ஷர்மா ஒலி, அடுத்த மாதம் இந்தியா வரவுள்ள நிலையில், திரு விக்ரம் மிஸ்ரியின் பயணம் இருதரப்பு உறவில் முக்கிய அம்சமாக கருதப்படுகிறது.

<<<<<>>>>>

யுக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து ரஷ்ய அதிபர் திரு புதினுடன் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், வரும் 22-ஆம் தேதிக்குள் அதிபர் புதின் மற்றும் யுக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியுடன், தாம் பேச்சு நடத்த இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும், இதுதொடர்பாக, வெள்ளை மாளிகையில் நாளை நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்குமாறு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுக்கும் அதிபர் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

<<<<<>>>>>

துரந்த் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி இன்று டைமன் ஹார்பர் அணியை எதிர்கொள்கிறது.

ஜம்ஷெட்புரில் இப்போட்டி மாலை 4 மணிக்கு தொடங்குகிறது.

***<<<<<END>>>>>***